நாள் 17.06.2025

அசல் வழக்கு எண் 73/2020

வா சா 1 அருள்செல்வன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்கோரிக்கைக்கு பதிலுரை தாக்கல் செய்தேனா என்பது ஞாபகம் இல்லை. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் முனைஞ்சிப்பட்டி கிராமம் புல எண்.138 ல் மொத்தம் 3 ஏக்கர் 12 செண்ட் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் 12 செண்டில் 78 செண்ட் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனது தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில் பக்கம் 3 பாரா 8 ல் 78 செண்ட் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளேன் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி 78 செண்ட் பிரதிவாதியின்அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியாது.

மேற்படி 78 செண்ட் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் தெரியாது. எனது சீர்திருத்த பிராதில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண்.138 ன் தென்புறம் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.138 ற்கு மேல்புறம் எந்த சர்வே எண் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. சர்வே எண்.138 ல் வடபுறத்திலிருந்து தென்புறமாக 1 முதல் 5 சர்வே எண்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.138/5 ற்கு மேல்புறம் 139/4 உள்ளது என்றால் தெரியாது. நான் தபசில் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு இடத்தை அளந்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எனது பிராதில் சர்வேஎண்.138 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்தில் கிணறு மற்றும் போர்வெல் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தபசில் சொத்து சர்வேயர் அளவீடு செய்து எனக்கு தனிப்பட்டா எதுவும் வழங்கினார்களா என்றால் வழங்கினார்கள்.

சர்வே எண்.138 ல் எனக்கு 2 ஏக்கர் 32 செண்ட் பாத்தியப்பட்டது என்று தெரியும். மீதி இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. மீதி இடம் எந்த திசையில் உள்ளது என்றும் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடபுறம் தான் சாம்பவசதாசிவம் இடம் உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு

தென்புறம் உலகநாதன்பிள்ளை இடம் உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு மேல்புறம் சர்வே எண்.139 உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு கீழ்புறம் சண்முகம்பிள்ளை இடம் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. சர்வே எண்.138 தெற்குபுறம் உள்ள இடம் என்னுடைய அனுபவத்தில் இல்லாததால் அது பற்றி விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது.

நான் தபசில் சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் தான் சுற்றியுள்ள நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. (மீண்டும் எனக்கு மறதியாக உள்ளது என்று கூறினார்). நான் எனது நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் பெற்றபிறகு தான் வேதமாணிக்கத்திடமிருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு தெரியாது. வில்லங்க சான்றிதழில் அவ்வாறு துலங்குகிறது. இவ்வழக்கில் ஒருதலைப்பட்ச தீர்ப்பு பெற்ற பிறகு தான் பட்டா மற்றும் அடங்கல் நான் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் அதற்கு முன்பே தாக்கல் செய்துள்ளேன்.

பிரதிவாதியின் எதிர்கோரிக்கையை தள்ளுபடி செய்யவேண்டும், எதிர்கோரிக்கைக்கு செலுத்திய நீதிமன்ற கட்டணம் சரியல்ல என்று பதிலுரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு வழங்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.138 ல் தெற்கடைய 78 செண்ட் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளதால் நான் கேட்ட நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.138/5 என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. சர்வே எண்.138 ல் தெற்கடைய 78 செண்டை பொறுத்து சுவாதீன பரிகாரம் கேட்காமல் விளம்புகை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க கூடுதல் சாட்சி விசாரிக்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.06.21 16:35:46 +0530